27.08.2024

OS.No.29/2020

PW 1 – ராமகிருஷ்ணன், த/பெ.சுப்பையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.08.2024.

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதிகள் தரப்பில்)

1. எனக்கு எழுதப்படிக்க தெரியும்.

2. நான் வழக்கு தாவா சொத்து வீட்டில்தான் குடியிருந்து வருகிறேன்.

3. தாவா சொத்திற்கு தென்காசி நகராட்சி கொடுத்த குடிநீர் இணைப்பு பெற்று 3 வருடம் ஆகிறது.

4. தாவா சொத்தில் 80 அடியில் ஆழ்துளை கிணறும் அமைத்துள்ளேன்.

5. தாவா சொத்தின் கீழ்புறம் வசிப்பவர்கள் வீட்டில் ஆழ்துளை கிணறு இல்லை.

6. தாவா சொத்தின் கீழ்பக்கத்தில் தென்வடல் பாதையில் தென்காசி நகராட்சியால் 3 வருடத்திற்கு முன்பு அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுடன் கூடிய அடிபம்பு உள்ளது. நான் வழக்கிற்காக 3 வருடம் என தவறாக கூறுகிறேன் என்றும், அடிபம்பு போட்டு 6 வருடம் ஆகிறது என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின்படி பொதுகிணற்றில் 16 ல் 1 பங்கு எனக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றின் வயது 110 இருக்கும். கிணற்றில் மீதி 15 பங்கு யாருக்கு உரிமையானது என எனக்கு தெரியாது. நான் வா.சா.ஆ.1 ன் மூலம் கிரையம் வாங்கும்போது 15 பங்கு யாருக்கு என கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை. தாவா சொத்திற்கு அருகில் மேற்படி 15 பங்குதாரர்கள் இல்லை. வழக்கு தாக்கல் செய்தபின் அந்த 15 பங்குதாரர்கள் யார் என கேட்டு தெரிந்து கொண்டேன் அவர்களை அழைத்தபோது செலவு செய்யஇயலாது எனகூறிவிட்டார்கள்.

8. அந்த 15 பங்குதாரர்களை பற்றி என் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

9. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்க்கவில்லை.

10. பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரையில் 15 பங்குதாரர்களை இவ்வழக்கில் சேர்க்கவேண்டும அவர்களை சேர்க்காமல் என் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என எதிர்வழக்குரையில் கூறியுள்ள விவரங்களை நான் தெரிந்துகொண்டேன். அந்த 15 பங்குதாரர்களை சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

11. நான் கிரையம் பெறும்போது கிணறு அங்கு இல்லை எனவும், கிணறானது பழமை வாய்ந்தது என்பதால் இடிந்து தரைமட்டமாகிவிட்டது என்றால் சரியல்ல.

12. நான் வழக்கிற்காக கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

13. வா.சா.ஆ1 கிரைய ஆவணத்தின்படி கிணற்றில் சுற்றடி நிலத்தில் எனக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனவே சுற்றறடி பாதை கேட்டு தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

14. கிணறானது 25 வருடத்திற்கு முன்பே இடிந்து தரைமாகிவிட்டதால் என் பரிகாரம் காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. எனவேதான் கிணற்றின் ஆழம், அதன் சுற்றளவு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

15. கிணற்றின் ஆழம், அதன் சுற்றளவு குறிப்பிடாமல் நான் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

16. வா.சா.ஆ.2 ஆவணமானது நான், ஜமுனா ராணி என்பவர் பொதுஅதிகாரமுகவர் என்ற முறையில் எனக்கு விற்று கொடுத்த கிரையப்பத்திரம் ஆகும். ஜமுனாராணி என் மனைவி என்றால் சரிதான். ஜமுனாராணி என் மனைவி என பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

17. ஜமுனாராணி பெயரில் உள்ள அசல் பொது அதிகாரப்பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என்

வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என் மனைவி ஜமுனாராணி பெயரில் பொதுஅதிகாரப்பத்திரம் எதுவும் இல்லை எனவும், வா.சா.ஆ.2 ஆனது நான் கிரையம் பெறுவதற்காக ஜோடிக்கப்பட்ட பொது அதிகார ஆவணம் என்றால் சரியல்ல.

18. வா.சா.ஆ.2 ஏற்பாட்டாளர் பெயரில் கிரையச்சொத்தை பொறுத்து எந்த வருவாய் ஆவணமும் இல்லை எனவும், ஆவணச் சொத்தை விற்பதற்கோ, வில்லங்கம் ஏற்படுத்துவதற்கோ ஏற்பாட்டாளருக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

19. வா.சா.ஆ.2 ஆவணத்தை என் மனைவி பெயருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் உள்ள நபர்கள் ஒரே விலாசத்தில் வசிக்கவில்லை, வேறு வேறு விலாசத்தில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான்.

20. செல்வி மற்றும் சங்கர் திருச்சியிலும், நவநீதகிருஷ்ணன், சங்கரப்பன், முத்துகிருஷ்ணன் சென்னையிலும், பிரேம்குமார் மதுரையிலும் வசிக்கிறார்கள். சுப்பையா இறந்து 8 வருடம் ஆகிறது. சுப்பையா சென்னையில் வசித்து இறந்தார்.

21. நவநீதகிருஷ்ணன், சங்கரப்பன், முத்துகிருஷ்ணன் மற்றும் சுப்பையா தனித்தனியாக சென்னையில் வெவ்வேறு பகுதிகளில் வசித்துவருகிறார்கள்.

22. செல்வி, சங்கர், நவநீதகிருஷ்ணன், சங்கரப்பன், முத்துகிருஷ்ணன் பிரேம்குமார், சுப்பையா ஆகியோர்கள் தனித்தனியாக வசித்துவரும் நிலையில் வா.சா.ஆ.2 ஒரே விலாசத்தில் வசிப்பதாக கூறியதால் வா.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் இல்லாததாதல் தான் அதன் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

23. வா.சா.ஆ.2 ன் மூலம் எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும், எக்காலத்திலும் ஏற்பட்டதல்ல என்றால் சரியல்ல.

24. 3 ம் தபசில் சொத்தில் 3 ல் 1 பங்கு உரிமை என வா.சா.ஆ.2 ன் மூலம் நான் கோருகிறேன் என்றால் சரிதான்.

25. பொதுகிணற்றில் மீதமுள்ள 2 பங்கு யாருக்கு பாத்தியம் என எனக்கு தெரியாது. பொதுகிணறு எனக்கு பாத்தியம் இல்லாததால் தான் அதில் உள்ள பங்காளிகளின் விவரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

26. வா.சா.ஆ.3 ஆவணமானது, என்னுடைய தாத்தா பெயரில் உள்ள ஆவணமாகும்.

27. வா.சா.ஆ 3 ல் கண்ட சங்கரையா நாயுடு எனக்கு தாத்தா ஆவார்.

28. சங்கரையா நாயுடு அவர் பெயரில் உள்ள சொத்துக்களை யாருக்கு பாராதீனம் செய்யவில்லை. வா.சா.ஆ.3, தபசில் சொத்திற்கு சம்பந்தம் இல்லாத சொத்து என்றால் சரிதான்.

29. வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள எதையும் நான் கிரையம் வாங்கவில்லை.

30. வா.சா.ஆ.5, பட்சி நாயுடு என்பவர் இராமகிருஷ்ண நாயுடுவுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் ஆகும். அது தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணம் ஆகும்.

31. பட்சி நாயுடு எப்போது இறந்தார் என்று நினைவில் இல்லை. அவரது வாரிசுகளின் விவரம் எனக்கு தெரியாது. பட்சி நாயுடு தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டவர் என்பதால் அவரின் வாரிசுகளும் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றால் சாட்சி தற்போது பட்சி நாயுடு எனது மாமா. அவருக்கு வாரிசு இல்லை என பதில் அளித்தார்.

32. வா.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பில் கிணற்றில் 16 ல் 1 பங்கு உள்ளதாக மட்டுமே கோரியுள்ளேன் என்றால் சரிதான். நடைபாதை உரிமையும் கேட்டுள்ளேன்.

33. கிணற்றை 2019 ம் வருடம் பிரதிவாதிகள் தரைமட்டமாக்கி விட்டனர்.

34. வா.சா.ஆ.11 ஆவணத்தில் கண்ட புகைப்படம் எப்போது எடுக்கப்ப்டடது என்றால் கிணறு இடித்தபின்பு எடுக்கப்பட்டது. வா.சா.ஆ.11, 2002ம் வருடம் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

35. வா.சா.ஆ.11, 3ம் தபசில் சொத்திற்கு சம்பந்தப்பட்டதில்லை என்றால் சரியல்ல.

36. நான் கிரையம் வாங்கும்போதே தபசில் சொத்தில் கிணறு இல்லை என்றும், தற்போது வேண்டுமென்றே இடத்தை அபகரிப்பதற்காக கிணறு உள்ளது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

37. தபசில் சொத்தில் உரிமை இல்லாததாலும், அவசிய தரப்பினரை சேர்க்காததாலும் என் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

38. மறுவிசாரணை இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.